# அறிவறிந்த மூடர்கள்

அறிவாளிகளிலேயே, அறிவறிந்த மூடர்கள் என்ற ஒருவகை அறிவாளிகள் இருக்கின்றார்களா என்ற அய்யம் சிலருக்கு ஏற்படலாம். அந்த அய்யம் நியாயமானது தான்.

இத்தகைய அறிவாளிகள் பொதுவுடைமை நாடுகளில் இல்லை என்பதும் உண்மைதான். ஆனால் கடவுள், மத நம்பிக்கையுடைய நாடுகளில் - அவைகள் விஞ்ஞானத் துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தாலும் - நாம் குறிப்பிடும் மூடர்கள் ஏராளமாக இருக்கின்றார்கள் என்பதை மறுக்க முடியாது. இந்த அறிவாளிகளை ஆதாரங் காட்டித்தான, இந்தியா போன்ற நாடுகளிலிருக்கும் கடவுள்-மதவாதப் பிற்போக்குக் குமட்பல்- சமுதாயத்தில் அடிமட்டத்திலிருக்கும் ஏழைகளை ஏய்த்துப் பிழைக்கும் சுயநலக் கும்பல், நம்போன்ற நாஸ்திகர்களிடம் - பகுத்திறிவுவாதிகளிடம் வாதிடுகின்றது ; அழிந்தொழிந்து கொண்டிருக்கும் ஆஸ்திகத்தை அழியாமல் காக்க முயல்கின்றது.

நாம் கடவுள் -மதவாத தத்துவம் என்பது, கற்பிக்கப்பட்டதேயன்றி- இயற்கையானதன்று என்று விளக்கங்களை எடுத்துக்காட்டும் பொழுது, கடவுள்-மத வாதிகள் “கடவுள் நம்பிக்கை கொண்ட அந்த மகான்களைவிட, மகாத்மாக்களைவிட நீங்கள் அறிவாளிகளா ? ” என்று கேட்கின்றனர்.

பண்டைக் காலத்தில் வாழ்ந்தவர்களையும், நம்மோடு வாழ்ந்தவர்களையும், வாழ்பவர்களையும் தங்களின் உளுத்துப் போன கொள்ளைக்குத் துணையாக இழுத்து வருகின்றனர். “சிலப்பதிகாரத்திலே இளங்கோ சொல்லாா மதம் உண்டா ? மணிமேகலையிலே சாத்தனார் செப்பாத கடவுள்கள் உண்டா ? காந்தியாரின் கடவுள் நம்பிக்கையை நாடு அறியாதா ? சங்கராச்சாரியார்கள், மடாதிபாதிகள் ஆகியவர்கள் அருள் வாக்குகளைப் படிக்கவில்லையா ? கேட்கவில்லையா ? ” என்று கேள்விக் கணைகளைத் தெர்டுக்கின்றனர்.

அறிவியல் அடிப்படையில் - விஞ்ஞான ரீதியில் படைப்புக் கொள்கையை நாம் தகர்க்கும் பொழுது மேல்நாட்டு

விஞ்ஞானிகள் பலர்- "படைப்புக் கொள்கையை, பைபிளை நம்பவில்லையா ? சந்திரனில் இறங்கியவன் கூடக் கடவுளைப் பற்றிக் கூறவில்லையா ? " என்று அடுக்கடுக்காக வினாக்களைத் தொடுத்துத் தங்களது அறியாமைக்கு ஆதாரங்காட்டுகின்றனர். இவ்வாறு, அறியாமைக்கு-மடமைக்கு ஆதாராமாகத், துணையாகக் கொண்டு வந்து மதவாதிகளால் நிறுத்தப்படும் அறிவாளிகளைத் தாம் பெர்ட்ரண்ட் ரசல் அறிவறிந்த மூடர்கள் என்றழைக்கின்றார் ; நாமும் அவ்வாறே அழைக்கின்றோம். இனி இத்தகையவர்களில் சிலரைச் சந்திப்போம்.

**இளங்கோவடிகள்**

'தமிழே எமது உயிர் ; உணவும், உடையும், உறைவிடமும் தமிழுக்குப் பிறகுதாம் ' என்பவர்களால் போற்றிப் புகழப்படுவர்களாகிய இளங்கோவையும் , சீத்தலை சாத்தனாரையும் முதலில் சந்திப்போம். இளங்கோவடிகள் " அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூ உம், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூ உம் " என்பதை எடுத்துக் காட்டவே சிலப்பதிகாரம் என்னும் ஓர் பாட்டுடைச் செய்யுளை இயற்றியுள்ளார். இத்தத்துவம், ஒரு 'தலைவிதி'த் தத்துவமாகும். தவறு செய்பவர்களை அறக் கடவுள் அழிக்கும் என்பதும், மனித முயற்சியை, அநீதியை எதிர்த்துப் போராடும் ஆற்றலை மனிதனின் தன்னம்பிக்கையை-சிந்தனா சக்தியைத்-தகர்த்தெறிய கூடிய அசல் பிற்போக்குக் கருத்துக்களாகும். ஊழ்வினை என்பது, இயக்க இயல்வாத அறிவியில் தத்துவத்திற்கு முரண்பட்டதாகும்.

இளங்கோவின் கூற்றுப்படியும் நமது தமிழ் அறிஞர்களின் அரிய ஆராய்ச்சியின் முடிவுப்படியும், கண்ணகியின் கூற்றுப்படியும் - கண்ணகி தான் பத்தினிப் பெண்டிர்க்கு ஒரு 'மாடலாக' அமைகின்றாள். நடுநிலைச் சிந்தனையாளர்கள் வெறும் கண்ணகி மதுரையை எரித்ததையும், எரித்த முறையையும், போற்ற மாட்டார்கள். கண்ணகியின் பண்பினை ஒரு பத்தினிப் பெண்டிர்க்கு 'மாடலாக' எடுத்துக்காட்டாக கொள்ளமாட்டார்கள்.

" பட்டாங்கு யர்னும் ஓர் பத்தினியே
ஆமாகி
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன்

*மதுரையும் "*
*என்று கூறி ?*

*" இடமுலை கையால் திருகி,*
*மதுரை*
*வலமுறை மும்முறை வாரா,*
*அலமந்து*
*மட்டு ஆர் மறுகின் மறுமுலையை*
*வட்டித்து,*
*விட்டாள் எறிந்தாள், விளங்கு*
*இழையாள் "*
*என்கின்றார்.*

*உடனே, பார்ப்பனக் கோலத்தில் அக்கினிதேவன் கண்ணகி முன் தோன்றிக் கட்டளைக்குக் காத்து நின்கின்றான். அவனை நேர்க்கிப்*
*" பார்ப்பார் அறவோர் பசு*
*பத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவி எனும்*
*இவரைக் கைவிட்டுத்*
*தீத் திறந்தோர் பக்கமே சேர்க "*
*எனக் கட்டளை இடுகின்றாள். அக்கினி தேவனும் அவ்வாறே சேர்க்கின்றான் ; நல்லதேரான் கூல் நகராமாகிய மதுரையை எரித்து அழிக்கின்றான்.*

*இத்தகைய மடமையின கர்த்தாவாகிய இளங்கோவடிகளைச் சமுதாய வளர்ச்சியில் நாட்டங் கொண்ட பகுத்தறிவாளர்கள் எப்படிப் போற்ற முடியும் ? மேலும், நெருப்புக்கு உயிர் உண்டு என்பதும் அது மனிதனின் கட்டளைக்குக் கட்டுப்படும், ஏவலை ஏற்கும் என்பதும், எரிக்கும் நெருப்பு இடைஇடையே பொருள்களை விட்டுவிட்டு எரிக்கும் என்பதும் எத்தகைய மதவாத-அறிவியலுக்கு முரண்பட்ட அபத்தம் ஆகும் என்பதை அறிவுடையோர் அறியர். "எரிதல் என்பது - இராசயண முறையில் ஆக்ஸிஜன் வாயு வேறு ஏதேனும் ஒரு பொருளோடு எப்பொருளாயினும் சரியே சேருவதேயாகும்" என்பதை மூடநம்பிக்கையாளர் அறிந்து கொள்ள வேண்டும்.*

***சீத்தலைசாத்தனார்***

*“தன் காதலன் இறந்தவுடன் தானும் இன்னுயிர் நீத்துப் புகழ் பெறாது இழிவாக வாழ்கின்றனர் ” என்று கூறும் மாதவி யானவள், பத்தினிப் பெண்களின் இலக்கணத்தை வரிசைப்படுத்துகின்றாள். அதாவது சாத்தனார் - மாதவியின் வாயிலாகப் , பத்தினிப் பெண்களுக்கு இலக்கணம் கூறுகின்றார். “முதல் வகையினர் காதலன் இறந்துவிட்டால் கவலை தாங்காது உடனே இன்னுயிர் ஈவர் ; இரண்டாம் வகையினர் இன்னுயிர் ஈயாது குளிர் நீர்ப் பொய்கையில் நீராடி மகிழ்தல் போன்று காதலனுடைய ஈமத்தீயில் மகிழந்து மூழ்கி மாய்வர் ; மூன்றாம் வகையினர் எரிபுகாது கைம்மை நோன்பு கொண்டு உடலினை வருத்தி வாழ்வர் ” ; என்பதே அவ்விலக்கணம்.*

*பெண்களும் உயிருள்ள ஜந்துக்கள் தாம். ஆண்களைப் போன்று பெண்களுக்கும் இயற்கையுணர்ச்சிகள் உண்டு என்று எண்ணும் எந்த மனிதனும் பத்தினிப் பெண்களுக்கு இத்தகைய இலக்கணத்தை வைக்கமாட்டான். “உடன் உயிர் நீத்தல், உடன் கட்டை ஏறுதல், கைம்மை நோன்பு கொண்டு காலமெல்லாம் செத்துக் கொண்டிருத்தல் ” என்பதை அறிவுள்ளவர்களின் கூற்றாகக் கொள்ள முடியுமா ? மேலும் “ஜனங்களைப் பூதங் காக்கின்றது, தெங்வம் காக்கின்றது , பீடிகையில் கரும்புகளை இட்டால் மலர்களாகும் ; அவ்வாறு அலர்ந்த மலர்கள் ஆண்டு பலனாயினும் வாடர் வண்டுகள் மொய்க்கா. இடும் மலர்கள் கருத்திடைக் கொள்ளும் தெய்வத்தை அடையும் ; நினைப்பின்றி இடும் மலர்கள் இட்ட இடத்திலேயே இருக்கும்” என்கின்றார். இத்தகைய கருத்துக்கள் அறிவியலுக்கு உண்மைக்கு எவ்வளவு முரண்பட்டவை புறம்பானவை என்பதைச் சொல்லத் தேவையில்லை. சாதாரண அறிவு படைத்தவர்கள் கூட இக்கருத்துக்களை ஏற்கமாட்டார்கள். இவைகளை ‘மேஜிக்’காரர்களின் கூற்றாகத்தான் கொள்ள முடியுமே தவிர, நல்லறிவாளர்களின் கூற்றாக கொள்ள முடியாது. எனவேதான் இத்தகையவர்களை அறிவறிந்த மூடர்கள் குப்பைத் தொட்டி அறிவாளிகள் என்கின்றோம்.*

***காந்திஜி***

*15-1-1934-ல் பீகாரில் பூகம்பம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் அவரவர்களின் வீடகிளலேயே நசுங்கிப் பிணமானார்கள்.*

*பிழைத்தோர் உற்றார் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து அநாதைகளாகி ஆறாத் துயரத்தில் ஆழ்ந்தார்கள். இந்திய வரலாற்றில் இது ஒரு சோகக் கதையாகும்.*

*இத்தகைய கொடிய,கோர நிகழ்ச்சிக்குப்-பூகம்பத்தால் ஏற்பட்டதற்குக் காரணம் தந்தார், காந்திஜி. அதாவது, ;இந்துக்கள் தீண்டாமையை அனுசரித்து வருவதால், ஆண்டவர் ஆத்திரம் அடைந்து தீண்டாமையைப் பின்பற்றிவரும் பாபிகளைத் தணடிக்கப் பூகம்பத்தை அனுப்பினார் ”; என்று அறிக்கையிட்டார்.*

*காந்திஜியின் இந்த அறிக்கையைக கண்டவுடன் கவிஞர் தாகூர் அவர்கள் ‘இவ்வறிக்கை அறிவியலுக்கு முற்றும் முரண்பட்டது’ என்றார்நேரு அவர்கள் ‘காந்திஜியின் அறிக்கையை படித்தேன் ; பெரும் அதிர்ச்சியடைந்தேன் ..இந்த அறிக்கையை விட அறிவியல் நோக்கினை எதிர்க்கக்கூடிய ஒரு செயலைக் கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினமாகும் உள்ளத்தில் ஏற்படும் அதிர்ச்சி ஜீரணக் கோளாறுகளையோ இன்னும் மோசமான நிலையையோ ஒருவருக்கு உண்டாக்கலாம். ஆனால் மனிதனின் பழக்க வழக்கமோ, தவறோ பூமியினுள்ளிருக்கும் பாறைகளின் அசைவைப் பாதிக்கும் என்பது ஒரு வியக்கத்தக்க விந்தையான செயயலாகும். பாபம்-கடவுளின் சீற்றம் போன்ற செயல்கள் பிரபஞ்ச இயக்கத்தின் மாறுதலுக்குக் காரணமாக இருக்கின்றன என்ற கருத்துக்களை நம்மை சில நூற்றாண்டுகள்ப் பின் இட்டுச் செல்கின்றன்.*

*‘உண்மை’ 14-08-1972*
*அதாவது இச்செயல்கள் அய்ரோப்பாவில் மாதாகோவில மத நீதிபதிகளின் அக்கிரமம் தலைவிரித்தாடிய காலத்திற்கும், அறிவியல் மேதை புரோனோவை உயிரோடு எரித்த காலத்திற்கும், சூன்ய வாதம் என்ற பெயரால் எண்ணற்ற நல்லவர்களை அழித்த காலத்திற்கும் இட்டுச் செல்கின்றன.*

*பூகம்பம் நம் பாபத்திற்கு ஆண்டவனால் அளிக்கப்பட்ட தண்டனை எனின், நாம் எந்தப் பாபத்திற்க்காகத் தண்டிக்கப்படுகின்றோம் என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது ? நாம் தண்டனைக்குள்ளவாதற்குரிய பல பாபகங்களை*

பெற்றுள்ளோம். ஒவ்அவொரு மனிதனும் தனக்குரிய விசித்திர விளக்கத்தைத் தரலாம். நூம் அந்நிய ஆட்சிக்கு அடிமையாக இருப்பதால் தண்டிக்கப்பட்டிருக்கலாம். நமது அநீதியான சமுதாய அமைப்பிற்காகத் தண்டிக்கபட்டிருக்கலாம் .. தீண்டாமையைச் செயல்படுத்தி வரும் அப்பகுதியில் ஏன் இந்த பூகம்பம் ஏற்படவில்லை ? மேலும் பிரிட்டிஃ;காரர்கள், நமது சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆண்டவனால் நமக்கு அளிக்கப்பட்டதண்டனைக்குத் தான் இந்த என்று சொல்லக்கூடும். ஏனெனில் பூகம்பம் ஏற்பட்ட அப்பகுதி மக்கள் தாம் சுதந்திரப் போராட்டத்தில் தீவிர பங்கு கொண்டவர்களாவார்கள்.'

' இவ்வாறு எண்ணற்றறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். மேலும் நாம் ஏன் ஆண்டவனின் செயல்களில் குறுக்கிட்டு அவனுது செயல்களின் விளைவுகளை மனித முயற்சியால் குறைக்க வேண்டும் என்ற வினாவும் எழுகின்றது. ஆண்டவன் இத்தகைய கொடிய வேடிக்கை விளையாட்டை விளையாட வேண்டும் ? குறைகள் நிறைந்தவர்களாக நம்மை ஏன் படைக்க வேண்டும் ? நம்மைச் சுற்றி ஏன் வழுக்கல்களையும் சறுக்கல்களையும் வழுக்கிவிடும் வாய்ப்புக்களையும் படைக்க வேண்டும் ? துன்பமயமானதும், கொடுமையானதுமான உலகை ஏன் படைக்க வேண்டும் ? புலியையும் ஆட்டுக் குட்டியையும் ஏன் படைக்க வேண்டும் ? பின் தண்டிக்க வேண்டும் ? என்று எழுதினார்.

நிலநடுக்கம் என்பது பூமியினுள் உள்ள பாறைகள் அசைவதால் ( ஊசரளவ ஆழஎநஅநவெ) ஏற்படுவதாகும். இந்த விஞ்ஞான உண்மை காந்திஜிக்குத் தெரியாததன்று. ஆனால் அவரது கடவுள், மதநம்பிக்கை, விஞ்ஞான உண்மையை ஏற்க மறுத்துவிட்டது. அறியாமை வென்றுவிட்டது. இதைத்தான் அறிவாளிகளின் அறிவீனம் எனக் கூறியுள்ளார் ரசல்.

சங்கராச்சாரியார், போப்பாண்டவர் போன்றவர்கள், "காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்திடுதலை" ப் பெரிய பாபம் என்கின்றனர் ஆண்டவன் கட்டளைக்கு மாறானது என்கின்றனர். மக்கள் பெருக்கம், நிலப்பரப்பு, உணவுப் பொருள்களின் உற்பத்தி ஆகியவை பற்றிக் கொஞ்சமும்

*சிந்தியாது, மத அடிப்படையில் - மூட நம்பிக்கையின் அடிப்படையில் - அறிவியலை, மக்கள் நலை எதிர்ப்பவர்களை 'நல்லறிவாளிகள்' என்று ஏற்றுக்கொள்ள முடியுமா ? "கண்ணால் காணுங் இவ்வுலகங் பொய் வாழக்கை பொய் "- " நாங்கள் கற்பனையால் கூறும் அவ்வுலகந்தான் மெய்" என்பவர்கள் அறிவாளிகளா ? சிந்தியுங்கள்.*

*எனவே தான் அறிவியலுக்குப் பொருத்தமில்லாது, மக்கள் நலனையும் கருத்தில் கொள்ளாது, வாழவேண்டிய அரிய வாழக்கையைப் பாழ்படுத்தும் அபத்தமானவைகளைக் கூறுபவர்கள் எத்தகையவர்களாக எப்படிப்பட்டவர்களாக இருப்பினும் அவர்களை அறிவறிந்த மூடர்கள் என்கின்றோம்.*

*வியக்கத்தக்க விஞ்ஞான சாதனைகளைப் புரியும் முதலாளித்துவ நாட்டு விஞ்ஞானிகள் தாங்கள் கடவுளையும் , மதத்தையும் நம்புவதாகச் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் பொதுவுடைமைத் தத்துவத்தை எதிர்ப்பதற்குப், பின்தங்கிய நாடுகளை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கும் - கடவுள் - மத தத்துவம் மிகச் சிறந்த ஆயுதமாகப் பயன்படுவதேயாகும் என்பதை உணரல் வேண்டும்.*

*:பேரறிஞர்-மாமேதை-முனிபுங்கவர்-நிறையப் படித்தவர்-அனைத்தும் அறிந்த அறிவாளி சொல்லிவிட்டார் ; நம்புகின்றோம் " என்று கூறுவது தவறு என்பதை வள்ளுவரும் சுட்டிக் காட்டியுள்ளார். அத்தகையவர்களிடத்தும் அறியாமை உண்டு என்கின்றார். 'தெரியாமை உண்டு' என்று கூறவில்லை அதற்குப் பதிலாக 'அறியாமை உண்டு' என்று கூறுகின்றார்.*

*'அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்*
*இன்மை அரிதே வெளிறு'*

*அதாவது அரியன கற்றக், குற்றம் அற்றார் மாட்டும் - ஆராயுமிடத்து ; வெண்மை அறியாமை இல்லாதிருத்தல் அரிது என்கின்றார்.*

*ஆகவே அறியாமை பொதிந்துள்ள அத்தகைய அறிவாளிகளை, அறிவறிந்த மூடர்கள் என்கின்றோம்.*

*¬ முற்றும்*

*'உண்மை' 14-10-1970*